பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 09 திங்கட்கிழமை 21.02.2024 கதிர் 111

# வருடத்தில் 3 லட்சம் இலங்கையர்கள் வேலை தேடி வெளிநாடு பறக்கின்றனர்

**ஒரு வருடத்தில் 3 லட்சம் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் செல்கின்றனர்என்றுஆய்வுஅறிக்கை ஒன்றில்தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளுக்குத் தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்களில் 41 சதவீதமானவர்கள்தொழில்வல்லுநர்கள்அல்லதுஏதோவகையில் திறமைமிக்கவர்கள்என்றுபுலம் பெயர்ந்து செல்லும் இலங்கையர்கள் தொடர்பான அந்த அறிக்கை கூறுகின்றது.**

**வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை மேலும்அதிகரித்துள்ளதாகவும், 2023ஆம்ஆண்டில்மாதாந்தம் வெளிநாடு சென்றோரின்** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையின் நீதி வரலாற்றில் சிறையில் அடைக்கப்படும் அரசியல்வாதிகள் உடனடியாகவோ ஒரு சில நாள்களின் பின்னரோ சிறைச்சாலை மருத்துவமனையில் அல்லது அங்கிருந்து வேறு தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவது ஒன்றும் புதிதல்ல. சிறைக் கம்பிகளுக்கு மத்தியில் அறைகளில் அடைந்து கிடப்பதிலும் பார்க்க சிறை வைத்தியசாலைகளில் வசதிகள் மேம்பட்டவை என்பதால் விஜபிகைதிகளுக்குஇந்தமாதிரியான ஏற்பாடு நீண்ட காலமாகவே நிலவி வருகின்றது.

உயிர்காப்புமருந்துஇறக்குமதியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ☞ 2

## மன்னர் பதவியே தந்தாலும் சரி திருடர்களை பாதுகாக்கமாட்டோம்

### சஜித் பிரேமதாச

எமக்கு அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களையோ மன்னர் பதவியையோ தந்தாலும் சரி திருடர்களைப் பாதுகர்கக் மாட்டோம் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கண்டிக்குநேற்றையதினம்விஜயம் மேற்கொண்டிருந்தஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, மல்வத்து மற்றும் அஸ்கிரியபீடங்களுக்கச்சென்றிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு ☞ 2

## தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் பற்றி கட்சிகளுக்கு விளக்கம்

### தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் தொடர்பில்அரசியல்கட்சிகளுடன் பெப்ரவரி 27 மற்றும் மார்ச் 6 ஆகிய தினங்களில் கலந்துரையாடுவதற்குத்திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டத்தின்படி, தேர்தலுக்கு செலவிடப்படும் பணம் மட்டுப்படுத்தப்படவேண்டியுள்ளது. எனினும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இது வரை ஒரு தேர்தலும் நடத்தப்படவில்லை.

அதன் காரணமாக குறித்த சட்டத்தின் ஏற்பாடுகள்தொடர்பில்அரசியல் வாதிகளுக்கு உரிய புரிதலை ஏற்படுத்தும் நோக்கில்கூட்டம்நடத்தப்படவுள்ளது. இதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்துஅரசியல்கட்சிகளுக்கும்அறிவித்தல்அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுஎன்றார்.

## பிரதான பொருளாதார மையமாக அம்பாந்தோட்டை மாறும் சாத்தியம்

### உண்டு என்கிறார் அரசுத் தலைவர்

அம்பாந்தோட்டையைநாட்டின்பிரதான பொருளாதாரமையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அம்பாந்தோட்டை பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிக்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் முதலீடுகளைத் தேசிய பொருளாதாரத்திற்குநன்மைபயக்கும் வகையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும்அவர் வலியுறுத்தினார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை மியன்மார் துறைமுகத்துடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,அதனைக்கிழக்குச் சீனாவின் சோங்கிங் துறைமுகம் வரையில் விரிவுபடுத்திப் பின்னர் ஆபிரிக்காவரைஅதனை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அம்பாந்தோட்டையை நாட்டின் பிரதான பொருளாதார மையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார்.

மேற்கு, கிழக்கு மற்றும்இம்பாந்தோட்டை நகரஅபிவிருத்தித்திட்டம் தொடர்பாகஅண்மையில் ஜனாதிபதி அலுவ ☞ 2

## ரணிலை வெல்ல வைக்க மக்கள் தீர்மானிப்பார்களாம்

### ஐ.தே.க. உப தலைவர் அகிலவிராஜ் தெரிவிப்பு

நாட்டையும், ரணில் விக்கிரமசிங்கவையும் வெற்றியடையச்செய்வதற்கு பொதுமக்கள் தீர்மானம் எடுப்பார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ்காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின் மாத்தளை மாவட்ட மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அறுபது சதவீதமான வாக்குகள் மிதக்கும் வாக்குகளாக உள்ளன. 40 சதவீதமான வாக்குகளே கட்சிகளுக்குரியனவாக உள்ளன. அவற்றில் மாற்றம் ஏற்படுவதற்கு நீண்டகாலம் செல்லாது. நாம் இன்னமும் தேர்தலை முகங்கொடுப்பதற்கான பணியை ☞ 2

## அனைத்துக்கும் பெரமுனவிடம் திட்டங்கள் உண்டு - நாமல்

அனைத்துக்கும் எம்மிடத்தில் திட்டங்கள் உண்டுஎன்றுபொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டைநாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரி வித்தார்.

கொழும்பில் நேற்று பொதுஜனபெரமுனவின் தசபலசேனா தேசிய வேலைத்திட்டம் தொடர்பான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொதுஜனபெரமுன மிகப்பெரும்கட்சி.மூன்று தேர்தல்களில் மிகப் பெரும் வெற்றியைப் பெற்றுக்கொண்ட கட்சியாகும். ஆகவே எமக்கு எந்தத் தேர்தலையும் முகங்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களைக் கொண்டுள்ளோம். ஆகவே அது குறித்து மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை.

நாம்அரசியல்ரீதியாக ஒன்றிணைவோம். நாட்டை மீளக் கட்டியெழுப்பும் செயற்படு ☞ 2

## பாடசாலை மாணவருக்கு உதவ ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில்

### ஆளும் தரப்புத் திட்டம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியம் 'ஜனாதிபதிகல்விபுலமைப் பரிசில் 2024/2025' திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் உள்ள 10,126 பாடசாலைகளையும் உள்ளடக்கியவகையில், தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் (100,000) மாணவர்களுக்கு, வருடாந்தம் இந்த நிதியுதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இந்த முழுமையான திட்டத்திற்கும்3600மில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கியுள்ளது.

நாட்டின் ☞ 2

## எதிர்காலத் தேர்தல் மேடைகள் விசித்திரமாகவே அமையும்

### ஜேவிபி தலைவர் அநுர குமார எதிர்வுகூறல்

எதிர்காலத்தில் வரப்போகின்ற தேர்தல் மேடைகள் விசித்திரமானதாக அமையப் போகின்றன என்று ஜேவி.பி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கதெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மகளீர் மாநாடு நேற்று கம்பஹாவில் நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1994ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா, 2005ஆம்ஆண்டுஜனாதிபதி மஹிந்த ராஜக்ச, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, 2019 கோட்டாபய ராஜபக்ச, பின்னர் ரணில் விக்கிரமசிங்கஆகியோர்ஒரேமேடையில் ஏறப்போகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளை அவதானித்த அவர்கள் அச்சமடைந்துள்ளார்கள்.

ஆனால்அவர்கள் முதலாளித்துவத்துக்கள் வெற்றியைத் தக்கவைத்துக் கொள்வதற்குஅவ்வாறேமுல்வார்கள். சில தருணங்கள் அவர்கள்ஒன்றிணைந்து கொள்ளாது விட்டாலும் அவர்கள் எமக்கு எதிராக ஒருமித்துச்செயற்படுவதற்கு தயாராகவே உள்ளனர்.

இதனால்எதிர்வரும் காலத்தில் காணப்படுகின்ற தேர்தல் மேடைகள், இலங்கை வரலாற்றில் விசித்திரமானதாக காண்பபடும். ஏவ்வாறாயினும்,அதுவொருதீர்க்கமான விடயமாக காணப்படுகின்றது. என்றர்.

## மத்திய வங்கி ஊழியர் சம்பள உயர்வு தொடர்பில் விளக்கமளிக்கத் தயாராம்

இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடனும், தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலுமேதமது ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்புத் தொடர்பில் குற்றச்சாட்டுக்களைமுன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கிதயாராகவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில்கடந்தநாடாளுமன்ற அமர்வுகளில் பல உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில்அவதானம்செலுத்தப்பட்டிருப்பதாகக்கூறி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மத்திய வங்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதேவேளை இது குறித்து விளக்கமளிப்பதற்காக எழுத்து மூல அவகாசம் கோருமாறுநிர்வாகசபையினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக, நிதியமைச்சராகக் கடமையாற்றும் ஜனாதிபதிக்கு கடந்த 22 ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பவைத்ததாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அவகாசத்தின் பின்னர் உரிய நாடாமன்றக்குழுவின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்க ☞ 2

## இனி இது .....

கெஹலிய ரம்புக்வெலவும் இதற்கு விதிவிலக்கல்ல. குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுநீதிமன்றத்தால்விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர், உடனடியாகவே சிறைச்சாலை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார். அவரது உடல் நிலையைக் காரணமாகக்காட்டிஅவரைஅந்தவைத்தியசாலையிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கநீதிமன்றமும்அனுமதி வழங்கியிருக்கிறது.

அரசியல் சூழல் காரணமாகப் பாவம்கெஹலிய. சிறையில்சென்று அவரைப் பார்ப்பதற்கும் ஆறுதல் கூறுவதற்கும் அரசியல்வாதிகள் எவரும் வெளிப்படையாக முன்வருகிறார்கள்இல்லை.பொருளாதார நெருக்கடி தீவிரமாக இருந்த சமயத்திலேயே பொது மக்கள் பணத்தை ஊழல் மூலம் கொள்ளையிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஒருவரைச் சிறையில் சென்று பார்ப்பதன் மூலம் தேர்தல் காலத்தில் தமது அரசியலுக்கும் ஆப்பு வைத்துக்கொள்ளவிரும்பாதகாரணத்தால் எந்த அரசியல்வாதிக்கும் சிறைக் கம்பிகளுக்கு மத்தியில் கெஹலிய வைசந்திக்கும்துணிச்சல்இன்னமும் வரவில்லை.

இதனால் சிறைச்சாலை வைத்தியசாலைக்குள் சேர்க்கப்பட்டிருந்தாலும்கூட கெஹலியவின் நிலமை பரிதாபகரமானதுதான் என்றுசிறைச்சாலைவட்டாரங்களை மேற்கோள்காட்டிதகவல்கள்இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. கெஹலியவுக்கு இரவு நேரத்தில் சுவாசிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவாம். அவருக்கு ஏற்கனவே இருக்கும் நோய்களுக்கான மருந்துகள் சிறைக்குள் ஒழுங்காகக் கிடைப்பதிலும் பிரச்சினைகள் நிலவுகின்றனவாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு உரிய சிகிச்சை சிறைக்குள் வழங்கப்படவில்லை என்றும் அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றின்கவனத்திற்குக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் அவரைச் சிறையிலிருந்து வெளியே எடுப்பதற்கான முயற்சிகள் என்று அடித்துக்கூறுவோரும்உள்ளார்கள். இருந்தாலும் சகாக்களால் கைவிடப்பட்ட கெஹலியவின் உண்மைநிலைஎன்ன? அதுஎப்படி விளக்கமறியலுக்குச் சென்றதுமே அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்? சிறைஅறைகளை விட வைத்தியசாலையில் அவருக்கு என்னென்ன வசதிகள் அதிகமாகக் கிடைக்கின்றன? சிறையில் அடைக்கப்படும் அரசியல்வாதிகள் எல்லோரும் சிறை வைத்தியசாலையில்சென்றுதஞ்சமடைந்துகொள்ளும் அளவிற்கு அங்கு என்னதான் இருக்கின்றது? போன்ற பல்வேறு வினாக்களும் கெஹலியவின் சிறை வாழ்வையொட்டிஎழத்தொடங்கியிருக்கின்றன.

கொழும்பில் சிங்கள ஊடக நண்பர்கள் பலர் அது தொடர்பான விரிவான புலனாய்வில் இறங்கியிருக்கிறார்கள். விரைவில்,"உள்ளே என்ன நடக்கிறது உண்மையில்...." என்ற விவரங்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். ஆனாலும் கெஹலியவின்தற்போதையநிலை மோசமானதுதான், அது வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதற்கு ஒப்பானது என்கிறார்கள் மக்களில் பலரும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வருடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை 25 ஆயிரமாக உயர்ந்திருந்ததாகவும் அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒருவருடத்தில்சுமார் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டைவிட்டுவெளியேறுகின்றனர் அல்லது வேலைக்காக வெளிநாடு செல்கின்றனரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனைத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை முறையாகவே முன்னெடுப்போம். அனைத்துக்கும்எம்மிடத்தில் திட்டங்கள் உள்ளன" என்றார்.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தமற்றும்நடுத்தரவருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலைஉபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்களில்நிலவும்சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக்குறைந்த வசதிகளின் கீழ் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் இந்நாட்டு மாணவர்களுக்குத் தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்கி, அதன் ஊடாக நாட்டின்மனிதவளத்தைமேம்படுத்த முதலீடுசெய்வதேஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

இதன்படி, இந்தப்புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயல்முறை மற்றும் அது தொடர்பான அனைத்துத் தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வபேஸ்புக்பக்கமான www.facebook.com/president.fund மூலம் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கப்படும்.

## பிரதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனை சுட்டிக்காட்டினார்.

கொழும்பு நகரம் உட்பட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் சுற்றுலா வலயங்கள் தொடர்பான மூலோபாயஅபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

மொனராகலை பிரதேசத்தில் மேலதிகமாகக்காணப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளைப் பயன்படுத்தி புதிய முதலீட்டுவலயங்களைஉருவாக்கும்திட்டம்குறித்தும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், நகர நெரிசலைக் குறைப்பதற்காக அவிசாவளை மற்றும் எஹெலியகொட உட்பட பிரதேசங்களின் மூலோபாய திறன்களைப் பயன்படுத்தி புதிய நகரங்களைஅபிவிருத்திசெய்வதன் முக்கியத்துவத்தையும் இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்த்து, பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் வட கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணித்தல் தொடர்பான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையை முக்கிய முதலீட்டு வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. திருகோணமலை நகர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, பொருளாதார வளர்ச்சி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்குஇந்திய-இலங்கைஇருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, அமைச்சுகளின்செயலாளர்கள், பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் குறித்த மாவட்ட செயலாளர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ரணிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கவில்லை.

இரண்டுகட்சிகள்முன்னிலையில் காணப்படுகின்றன. ஆனால் எம்முடன் பெரிய கட்சிகளில் உள்ளவர்கள் இணையவுள்ளார்கள். அத்துடன் பிரிந்து சென்றவர்களும் இணையவுள்ளனர். அந்தக்கூட்டணி அமைகின்றபோது என்ன செய்ய வேண்டும் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

நாட்டையும், ரணில் விக்கிரமசிங்கவையும் வெற்றியடையச் செய்வதற்கு பொதுமக்கள் தீர்மானம் எடுப்பார்கள். அந்த தீர்மானத்தில் அனைவரும் பங்குதாரராக மாற வேண்டும். அதன் மூலம் நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு விளக்கமளிக்க மத்திய வங்கி தயாராகவுள்ளதாகஅவ்வறிக்கையில் மத்திய வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள 225இலட்சம் மக்களுக்கு பொறுப்புக்கூறவல்ல கட்சியாகவே நாம் செயற்பட்டுன வந்திருந்தன. இந்தபொறுப்புக்கூறும் பயணத்தில் பொறுப்புள்ள கட்சியாகவே நாம் செயற்பட்டு வருகின்றோம்.

எமக்கு அமெரிக்கா ஜனாதிபதியின் அதிகாரங்களை தருவதாக கூறினாலும் சரி, மன்னர் பதவிகளை தருவதாக கூறினாலும் சரி திருடர்களை பாதுகாக்கின்றசெயற்பாடுகளை முன்னெடுக்கப்போவதில்லை.

# வையத்துள் வாழ்வாங்கு வாழவுரைத்தார் வள்ளுவனார்!




நல்லறத்தை நன்னெறியை நாமுணர வைப்பதற்கு
வள்ளுவனார் உவந்தளித்த நல்வரமே குறளாகும்
சொன்னயமும் பொருணயமும் எமக்கீயும் நன்னூலாய்
எஞ்ஞான்றும் விளங்குவது எங்கள் திருக்குறளாகும்

ஆயிரத்து முன்னூற்று முப்பதென்ப தெண்ணல்ல
அத்தனையும் அனைவருக்கும் வாய்த்தபெரு பொக்கிஷமே
ஈராயிரம் வருடம் நிலைத்திருந்து இம்மண்ணில்
பேரொளியாய் திகழுவது வள்ளுவத்தின் பெருமையன்றோ

தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதல்வர் பலராவர்
அனைவருமே அன்னைக்கு ஆசைமிகு புத்திரரே
என்றாலும் வள்ளுவரை எம்மன்னை அணைத்திடுவாள்
வள்ளுவரால் தமிழமுது வானளவும் சென்றதுவே

இல்லறத்தைச் சொன்னார் துறவறத்தைச் சொன்னார்
நல்லறத்தை அதனூடாய் நயமுடனே பயந்தார்
சொல்லறத்தை வள்ளுவத்தின் உயிராக்கி நின்றார்
சுவையோடு கருத்துரைத்து வள்ளுவத்தை ஈந்தார்

எதுவுரைத்த போதும் அதுவாகி நின்றார்
எவருணர்வும் நோகா கருத்துரைக்க நினைத்தார்
நினைத்த கருத்தை நீதியாய் உரைத்தார்
நிலையாக நிற்கும்படி வள்ளுவத்தைக் கொடுத்தார்

அன்னைக்கும் சொன்னார் அப்பனுக்கும் சொன்னார்
அவரீன்ற பிள்ளைகட்டும் அருமையாய் சொன்னார்
கல்லென்று சொன்னார் நடவென்று சொன்னார்
கல்லாமல் இருந்தால் கண்ணில்லை என்றார்

கற்றுவிட்டால் எழுமைக்கும் துணையாகு மென்றார்
கல்லாமை யாவருக்கும் பொல்லாமை என்றார்
கற்றுவிடு கற்றுவிடு எனவுரைத்து நின்றார்
கடவுளடி பற்றுவதே கற்றபயன் என்றார்

சினமடக்கு என்றார் தீயசெயல் கடிந்தார்
தனக்குவை இல்லான் தாழ்சேரு என்றார்
மனக்கவலை மாற்ற மருந்துபல சொன்னார்
வையத்துள் வாழ்வாங்கு வாழ பலவுரைத்தார்

நன்மைதரும் இன்சொல்லை நாடுவெனச் சொன்னார்
நலனற்ற சொல்லனைத்தைம் கேடுவென வுரைத்தார்
இனிமையுடன் பேசுவதே இன்பமெனச் சொன்னார்
இவையனைத்தும் வள்ளுவத்தின் உயிர்மூச்சு என்றார்

கொல்லாதே என்றார் குடியாதே என்றார்
கொல்லுவதைத் தின்னுவதை விட்டுவிடு என்றார்
நீவளர உயிர்வதைத்தல் நீதியிலை என்றார்
உயிரோம்பி வாழுதல்தான் உயர்வாழ்வு என்றார்

புத்துணர்வுக் கருத்துக்களை பொறுப்புடனே சொன்னார்
புலனெல்லாம் தூய்மைபெற பொருத்தமாய் புகன்றார்
பொருத்தமில்லா கருத்துக்களைப் புறந்தள்ளி நின்றார்
புவிவாழ பொருந்துவதை வள்ளுவமாய் கொடுத்தார்



காலைக்கதிர் Kalaikkathir

## அன்னமலை ஸ்ரீசக்தியில் முப் பெருவிழா நிகழ்வுகள்







(காரைதீவு சகா)

சம்மாந்துறை வலயத்துக்குப்பட்ட அன்னமலை ஸ்ரீசக்தி வித்தியாலயத்தின் முப்பெருவிழா அதிபர் பொன்.பாரதிதாசன் தலைமையில் வியாழக கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

வகுப்பு -01 இன் வித்யாரம்பம் 'புதுமுக புகுவிழா 'இவகுப்பு -5இன் விடுகை 'விழா'இ மற்றும் முன்பள்ளி மாணவர்களின் 'புதுமுக புகுவிழா 'வும் சேர்ந்து முப்பெருவிழாவாக நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக இப் பாடசாலையில் ஆரம்ப கல்வியை கற்றுஇ தற்போது ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளராக பணியாற்றும் ரத்னம் சுபாகர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா இ சிறப்பதிதியாக ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் கே. குணரெத்ன ஆலயயங்களின் நிர்வாக பிரதிநிதிகள் இ சமூக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றோரும் கலந்து சிறப்பித்தனார்.

இவ் விழாவில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை அன்னாமலையை சேர்ந்த கொழும்பில் வசிக்கும் தொழிலதிபர் எஸ். காண்டீபன் (திரு திருமதி காண்டீபன் விவேணி தம்பதிகள் ) வழுங்கி வைத்தனர்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (05)

## பொலிவேரியன் கிராமத்தில் வீடு தீப்பற்றி எரிந்து நாசம்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருதுஇ மாளிகைக்காடு மக்களை மீளக் குடியமர்த்த பிரதேச அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீடொன்றில் சனிக்கிழமை காலை திடீரென தீப்பற்றி எரிந்தமையால் வீட்டில் இருந்த பொருள்கள் தீக்கிரையானதுடன் வீட்டின் கூரைகள் சேதமாகியுள்ளன.

தீப்பற்றிய நேரத்தில் வீட்டில் யாரும் இருக்கவில்லை என்பதுடன் தீப்பற்றிய வீட்டின் தீயை அணைக்க அயலவர்கள் போராடி தீயணைப்பை மேற்கொண்டதுடன் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மினின் துரித நடவடிக்கையின் பயனாக விரைந்து வந்த கல்முனை மாநகர தீயணைப்பு வாகனமும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

தீயால் வீட்டின் பொருள்கள் முற்றாக சேதமாகியதுடன் வீட்டின் கூரையும் அழிவடைந்துள்ளதுடன் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவிலை. சம்பவ இடத்துக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினரும்இ முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் தேவையான உதவிகளை வழங்க விரைவாக தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அதிகாரிகளைப் பணித்திருந்தார். (05)

## சுற்றாடல் முன்னோடி பதக்கம் வென்ற கழுகமுவ மத்திய கல்லூரி மாணவிகளுக்கு கௌரவம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளில் முதன் முறையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சுற்றாடல் முன்னோடி

இணைப்பாட விதான செயற் திட்டத்தில் ஜனாதிபதி பதக்கத்தை முதல் முறையாக வென்று கெலிஓய இகழுகமுவ மத்திய கல்லூரி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

கம்பளை கல்வி வலயத்திற்குப்பட்ட கெலிஓய கழுகமுவ பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையான கழுகமுவ மத்திய கல்லூரி மாணவிகளான ஏ.எம். மரியம் லீனா இஎம்.என் .நூருல் ஹிக்மா எம்.ஏ.எப். பர்ஹா பீ.எப்.சஹாமாஇ எம்.எஸ்.சல்மா எம்.எஸ். எப்.சஹானா ஆகியோரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஆர்.எம்.அனஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கம்பளை தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவர் பஸ்லான் பாறூக் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பஸ்லான் பாறூக் பௌண்டேசன் ஊடாக பரிசில்களை வழுங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் இபாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (05)

### வியாபார நிலைய உரித்தாளரான பெண்ணிடம் சங்கிலி அறுப்பு

**இருவர் தப்பியோட்டம்**

வவுனியா - பூந்தோட்டம் பகுதியில் வியாபார நிலையத்திற்கு சென்ற இருவர் குறித்த வியாபார நிலைய உரிமையாளரான பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் சனிக்கிழமை தெரிவித்தனர்.

வவுனியாஇ பூந்தோட்டம் பகுதியில் பெண் ஒருவர் சிறிய வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றார். குறித்த வியாபார நிலையத்திற்கு சென்ற இருவர் பீடி தருமாறு கூறியதுடன்இ பெண் பீடியை எடுத்துக் கொண்டு நின்ற போது அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05-100)

## ஓட்டோ, மோட்டார் சைக்கிள்களுக்கு தர்மபுரம் பொலிஸால் ஸ்டிக்கர்கள்

தர்மபுரம் பொலீஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் தனியார் நிறுவனம் ஒன்றின் ஒழுங்குபடுத்தலில் தர்மபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான ஸ்டிக்கர்கள் அணிவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது

இதன் போது ஓட்டோக்கான ஸ்டிக்கர் கட்டணமாக 400 ரூபாவும் மோட்டார் சைக்கிள்களுக்கான கட்டணமாக 250 ரூபாவும் அளவிடப்பட்டு இவர்களுக்கான ஸ்டிக்கர்கள் அணிவிக்கப்பட்டது.

ஸ்டிக்கர் அணிவிப்பதற்கான காரணம் குற்றச் செயல்கள் மற்றும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காகவும் வீதி விபத்துக்கள் மற்றும் குற்ற செயல்களை இலகுவாக இனம் காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு இலகுவாக அமையும் எனவும் இதன் காரணமாக பாரிய அளவிலான குற்றச் செயல்கள் மற்றும் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்துள்ளனர். (05-113)

## கண்டல் தாவரங்களை நடுவது குறித்த ஆய்வு திருகோணமலை மாவட்த்தில்

(மூதூர் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கரையோரமாகவுள்ள தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளில் கண்டல் தாவரங்கள் நடுவது தொடர்பான ஆய்வுக்குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

மூதூர் ,வெருகல் ,கிண்ணியா ,திருகோணமலை குச்சவெளி மற்றும் தம்பலகாமம் ஆகிய பிரதேச செயலகப்பகுதிகளுக்கு கள விஜயம்செய்து கண்டல் தாவரங்களை நடுவது பற்றிய கள ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

குறித்த ஆய்வுக்குழுவினர் மூதூர் பிரதேச செயலகப் பகுதிகளில் கடந்த சனிக்கிழமை விஜயம்செய்து இதுதொடர்பான இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு இதுதொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

மூதூர் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள் உரிய இடங்களை இக்குழுவினருக்குக் காண்பித்துள்ளனர் என மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் கூறினார். (05)

## மார்க்க சொற் பொழிவு

(சம்மாந்துறை நிருபர் ில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பத்ர் ஹிஜ்றா ஜ/ம்மா பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் இவாஸ்ட் சமூக அமைப்பும் இணைந்து வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்த மார்க்க சொற்பொழிவு மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் 'தொழுகையின்பால் மக்களை ஈர்த்தலும் றமழானை வரவேற்றலும்' எனும் தொனிப்பொருளில் அஷ்ஷேஹ் ஆதில் ஹசன் மார்க்க சொற்பொழிவை நிகழ்த்தினார்.

நிகழ்வில் ஆண்கள் இ பெண்கள் இ மாணவர்கள் இ ஊடகவியலாளர்கள் இ சமூக அமைப்புக்கள் இ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் எனப் பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

## சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் திண்ம கழிவு சேர்வதைத் தடுக்க முயற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது வொலிவேரியன் விளையாட்டு மைதானத்தின் முன்றிலில் 'பிறேவ் லீடர்ஸ் ரெஸ்ட்பார்க்' உருவாக்கும் சிரமதானப் பணி அம்பாறை வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸின் அனுசரணையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

சாய்ந்தமருதின் தாய்க் கழமான பிறேவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழத்தால் அதன் முன்னாள் தலைவரும், ஓய்வுபெற்ற முன்னாள் மக்கள் வங்கியின் முகாமையாளருமான எம், எஸ். எம்.மசூத் மற்றும் கழகத்தின் சிரேஷ்ட விளையாட்டு வீரரும் ஆலோசகருமான எம்.வை.ஹாறூன் ஆகியோரின் வழிகாட்டலில் கழகத்தின் புதிய தலைமையும் விளையாட்டு உத்தியோகத்தருமான ஏ.எம்.எம்.றிபாஸின் தலைமையில் இச்சிரமதானப் பணி இடம் பெற்றது.

மைதானத்தின் முன்றிலில் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்படுவதால், அப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசியதுடன் வீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் அசௌகரியங்களையும் சுகாதார சீர்கேட்டையும் ஏற்படுத்தி வந்தது.

இதனைக் கவனத்தில் கொண்ட பிறேவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எம்.எம்.றிபாஸ் திட்டத்தை கழகத்தின் ஒத்துழைப்புடன் செயலில் காட்டியிருந்தார்.

விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டு துறையில் மட்டுமல்ல பொதுவிடயங்களிலும் செயற்பட முடியும் என்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.(05)





## கில்மிஷாவுக்கு வவுனியாவில் பாராட்டு விழா

இந்திய சீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப வெற்றிநாயகி ஈழத்து இசைக்குயில் கில்மிஷா உதயசீலனுக்கு வவுனியாவில் பாராட்டு நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

வைத்தியரும் சமூக செயற்பாட்டாளருமான மதிதரனின் தலைமையில் வவுனியாஇ ஓவியா விருந்தினர் விடுதியில் சனிக்கிழமை இந்தப் பாராட்டு விழா இடம்பெற்றது.

சரிகமப நிகழ்வில் வெற்றி பெற்றமைக்காக ஈழத்து இசைக்குயில் கில்மிஷா உதயசீலனுக்கு பலரும் பொன்னாடை போர்த்தியும்இ மாலை அணிவித்தும் வாழ்த்துக்கள் தெரிவித்ததுடன்இ வாழ்த்து மடல்களையும் வழங்கியிருந்தனர்.

அத்துடன் வவுனியாவின் கந்தப்பு ஜெயந்தன் அவர்களின் இசை நிகழ்வும்இ கில்மிஷா உதயசீலன் அவர்களின் பாடல்களும் இடம்பெறறதுடன் கில்மிஷா உதயசீலன் அவர்களை கௌரவித்து விழா ஏற்பாட்டுக் குழுவால் ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன்இ வவுனியா நகரசபை செயலாளர் இ.தயாபரன் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்இ சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இசைக்குயிலை வாழ்த்திச் சென்றனர். (05-100)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அனைவருக்குமான கல்வி....

பிள்ளைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் விகிதம் தற்போது அதிகமாகவும் ஆபத்தான நிலையிலும் உள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியிருக்கிறார். கொரோனாபெருந்தொற்று அதைத்தொடர்ந்து பொருளாதார நெருக்கடி என்பன பாடசாலைக் கல்வி மீது தொடர்ந்து அடுத்தடுத்து இடம்பெற்ற பெருந் தாக்குதல்களாக மாறியுள்ளன. பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாது தவிக்கும் தாய், தந்தையர்களின் அவலம் குறித்து ஆளும் தரப்பினர் கவனம் கொள்ளவேண்டும். அவர்களுக்கான தீர்வுகளை முன்வைக்கவேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரமுடியும்.

இந்த நோக்கத்தோடுதான் அரசுத் தலைவரால் கல்விப் புலமைப் பரிசில் திட்டம் இந்த வருடத்திற்கும் அடுத்த வருடத்திற்குமாக அறிவிக்கப்பட்டிக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தரம் ஒன்று முதல் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களில்ஒருலட்சம்பேருக்குபுலமைப்பரிசில்வழங்கத் திட்டமிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கென 3,600 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்களில் நிலவும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என்று ஆளும் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக்குறைந்த வசதிகளின் கீழ் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் இந்நாட்டு மாணவர்களுக்குத் தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்கி, அதன் ஊடாக நாட்டின் மனித வளத்தை மேம்படுத்த முதலீடு செய்வதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

இந்தத்திட்டம் இரண்டு விடயங்களில் இன்னும் அதிகமாகக் கருத்தூன்றிக் கவனித்துச் செயற்படவேண்டியதாக உள்ளது. அதில் முதலாவது, ஒரு லட்சம் மாணவர்களுக்கு மட்டும் புலமைப் பரிசில் வழங்குவது. இலங்கையின் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 40 லட்சத்திற்கும் மேலானது. அப்படியிருக்கும்போது அவர்களில் மிகச் சொற்ப அளவினருக்கு மட்டும் புலமைப் பரிசில் வழங்குவது பிரச்சினைக்குத் தீர்வாகிவிடாது. இரண்டாவது, சிறப்பாகக் கற்பவர்களுக்கு மட்டும் புலமைப்பரிசில் வழங்குவது என்பது. அவர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும் அதேநேரம் வறுமையால் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் உதவித் தொகை கிடைப்பது கட்டாயம். இல்லையேல் அவர்கள் பாடசாலை இடைவிலகல் மூலமாக மோசமான பாதையைச் சென்றடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

பாடசாலையில் இருந்து இடைவிலகிய சிறப்பாகக் கற்பவர்கள் மட்டும் பாடசாலைகளுக்குத் திரும்பினால் போதாது. கற்கக்கூடிய அனைவருமே, அதிலும் பெருளாதார நெருக்கடி காரணமாக இடைவிலகியிருக்கக்கூடியவர்களும் இடைவிலகும் நிலையில் இருப்பவர்களும் தமது கல்வியைத் தொடர்வதற்கு ஏதுவாக இத்தகைய புலமைப் பரிசில்கள் இலகுபடுத்தப்படவேண்டும். நன்கு கற்கும் மாணவர்களைவிடவும் சாதாரணமாகவும் சுமாராகவும் கற்கும் மாணவர்களுமே பாடசாலைக் கல்வி முறைக்குத் திரும்புவது மிக அவசியம். அவர்கள் பாடசாலைக் கல்வியை முழுமைப்படுத்துவதன் மூலமே அவர்களின் வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய ஆகக்கூடிய கல்வி அடைவையாவது அவர்கள் பெறுவர். எனவே அரசுத் தலைவரின் திட்டம் பொருளாதார நெருக்கடியால் கல்வியைத் தொடரமுடியாதுள்ள அனைத்து மாணவர்களுக்கும் பரவலாகச் சென்றடைவதற்கான வழிவகை ஏற்படுத்தப்படவேண்டும்.



### ௨ஆவது ஆண்டில் ரஷ்யா – உக்ரைன் போர்

# மறைக்கப்பட்ட உண்மையும் திரிக்கப்பட்ட வரலாறும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

நேட்டோ படைகள் ஆங்காங்கே ரஷ்ய எல்லைகளில் நிறுத்தப்படுவது, ஏவுகணை தளம் அமைப்பது ரஷ்யாவின் பாதுகாப்புக்குப் பங்கம் என்பதை ரஷ்ய அரசும்-மக்களும் நீண்ட காலமாக உணர்ந்துள்ளனர். இது ரஷ்யாவை பொருளாதார ரீதியாகவும், அரசியல் - ராணுவ ரீதியாகவும் பலவீனமாக்கும் சவாலை அளிப்பதாகும். இதன் விளைவே இன்றைய ரஷ்யா - உக்ரைன் இடையே நடந்துவரும் போர்.





**சோவியத் சிதைவும் நேட்டோ ஆதிக்கமும்**

தற்போது நேட்டோ ரஷ்யாவை தொடர்ந்து பல வகையிலும் சுற்றி வளைத்து வருகிறது. அதுவே அந்த நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான உண்மையான மற்றும் நியாயமான கவலைகளை ஏற்படுத்துகின்றது, அது கவனிக்கப்படவேண்டும் என்று அதிபர் புட்டின் தன் பல உரைகளில் குறிப்பிட்டு வந்தார்.

மேற்கத்திய நாடுகள் சோவியத் யூனியனின் 'இறப்பை' கண்டு மகிழ்ந்தபோது, மிகைல் கோர்பச்சேவை 'மிகப்பெரிய' அறிவுஜீவியாக உருவாக்கி, பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு அவரை அழைத்து, இறுதியில் சோவியத் யூனியனை சிதைத்ததற்காக அமைதிக்கான நோபல் பரிசை வழங்கினர்.

கம்யூனிசத்தின் முடிவாக, சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, மேற்கத்திய உலகம் மகிழ்ச்சியடைந்தது மாத்திரமன்றி, அமெரிக்கர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரஷ்யாவுக்கு எதிரான செயல்களை இலகுவாகச் செய்தனர். முன்னர் உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தது மற்றும் சோவித் ஒன்றியத்தில் இருந்து பல 'குடியரசுகள்'பிரிந்த பின்னர் 1991 இல் தனி நாடுகளாக பரிணாமம் பெற்றன.

மேற்கத்திய உலகம் சோவியத் யூனியனின் வீழ்ச்சியைக் கொண்டாடியதுடன், கம்யூனிசத்தின் 'முடிவு' என்றும் மேற்குலக நாடுகளும் ஊடகங்களும் கொண்டாடித் தீர்த்தன.

ஆயினும் தற்போதைய மேற்குலகு புடினுடன் உடன்படாமல் அவரை இழிவாகப் பார்க்கலாம். ஆனால் அவருடைய தலைமையின் கீழ் ரஷ்யா இப்போது முன்பைவிட மிகவும் சக்திவாய்ந்ததாக இருப்பதாகவே பல மேற்கத்தேய அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா போன்ற முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து தோன்றிய அனைத்து நாடுகளையும் நேட்டோ ஆக்ரோஷமாகப் பின்தொடர்ந்தது. சோவியத் கூட்டணியில் இருந்து பிரிந்த மற்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, போலந்து மற்றும் செக் குடியரசு, ஸ்லோவாக்கியா, பல்கேரியா, ஸ்லோவேனியா போன்ற நாடுகள் நேட்டோவின் ஒரு பகுதியாக மாற்றின.

**நேட்போவில் இணையும் உக்ரைன்**

இந்நிலையில்தான் ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அனைத்து சர்வதேச பேச்சுக்களிலும், நேட்டோ விரிவாக்கம் பற்றிய பிரச்சினை ரஷ்யாவிற்கு உண்மையான கவலையாக இருந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் நலன்களைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் உரிமை உண்டு.

நேட்டோ படையில் இணைவதற்கு உக்ரைன் முனைப்பு காட்டியது. இதற்கு ரஷ்ய அதிபர் புட்டின் எதிர்ப்பு தெரிவித்துவந்தார். இருப்பினும் அந்த நாடு தனது முடிவிலிருந்து பின்வாங்குவதாகத் தெரியவில்லை. இதையடுத்து, இராணுவ நடவடிக்கைக்கு புட்டின் உத்தரவிட்டார். இதை ரஷ்யா ஒரு "சிறப்பு ராணுவ நடவடிக்கை" என்று அழைக்கிறது.

**ஈராண்டை பு ௶ ர்த்தி செய்யும் போர்**

ரஷ்யா - உக்ரைன் இடையே நடந்துவரும் போர் ஈராண்டை பூர்த்தி செய்கிறது. 2022 பெப்ரவரி 24 இல் தொடங்கிய போர் தொடர்ந்து நடந்துவருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்க உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தாராளமாக உதவி செய்து வருவது, ரஷ்யாவை மேலும் எரிச்சலூட்டியது. இதையடுத்து, ரஷ்யா ராணுவ நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது.

போர் தொடங்கி ஈராண்டு நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையிலும், மேற்கத்திய நாடுகளின் ராணுவ உதவிகள் உக்ரைனுக்கு வந்துசேரும் என்ற காரணத்தினாலும் ரஷ்யா ஒரு பெரிய தாக்குதலைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் உக்ரைனும் பதில் தாக்குதலுக்குத் திட்டமிட்டுவருகிறது. மறுபுறம் தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்ற மேற்கத்திய

(8ஆம் பக்கம் பார்க்க..)



# பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட் கால்பந்தாட் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பழை மகாஜனா தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் அகில இலங்கை ரீதியில் நடைபெற்று வரும் 18 வயதுக்குப்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட கால்பந்தாட்த் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணம், தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

அனுராதபுரத்தில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் குருணாகல் கவுசிகமுவ மகா வித்தியாலயத்தை எதிர்கொண்ட தெல்லிப்பழை மகாஜனா 7:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதிப்போட்டியில் களுத்துறை சென். ஜோன் கல்லூரி அணியை மார்ச் மாதம் 9 ஆம் திகதி கொழும்பில் சந்திக்கவுள்ளது. (05)

# கிழக்கு மாகாணத்தின் முதலாவது மருத்துவ ஆய்வுகூட அத்தியட்சகராக அட்டாளை றிம்சான் நியமனம்

(அபு அலா)

கிழக்கு மாகாணத்தின் முதலாவது மருத்துவ ஆய்வுகூட அத்தியட்சகராக அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.எம்.எம்.றிம்சான் நியமிக்கப்பட்டுள்ளார்.

2015-2016 இல் கிழக்கு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற சிறந்த உற்பத்தித்திறன் போட்டியில், மாகாண மட்ட மருத்துவ ஆய்வுகூட பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்று மாகாண மருத்துவ ஆய்வுகூட அத்தியட்சகராகப் பதவியுர்வு பெற்று அவருக்கான நியமனக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டார். அவர் தனது கடமையினை இன்று (திங்கட்கிழமை) களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் பொறுபேற்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# இலவச சீருடை இலவச புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கி வைத்தல்





(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை வலயத்திற்குட்பட்ட நிந்தவூர் மற்றும் காரைதீவு கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடையும் இலவசப் புத்தகங்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் பாடசாலை கலாசார மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம்.டீ.நௌபல் அலி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான சீருடை மற்றும் புத்தகங்களையும் வழங்கி வைத்தார்.

கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றியாஸா, கோட்டக் கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம் சஜித் , இணைப்புச் செயலாளர் பீ.எம்.எம்.ஜஃபர் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் கோட்டமும் காரைதீவு தமிழ் கோட்டங்களைச் சேர்ந்த 41 பாடசாலை மாணவர்களுக்கு இந்த விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்றன. பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரது பங்கேற்புடன் நடைபெற வேண்டுமென்ற கல்வியமைச்சின் பணிப்புரைக்கமைய நிந்தவூர் மற்றும் காரைதீவு பாடசாலைகளுக்கான இலவச சீருடை மற்றும் இலவச நூல் விநியோக நிகழ்வு இங்கு இடம்பெற்றது. (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளூர் பிரமுகர்களுடன், சுற்றுலாவிகளையும் கவர்ந்த யாழ். உடல், உள ஆரோக்கிய சதுக்கம்





யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட நடைபாதை பகுதியில் சிகரம் நிறுவனத்தின் படலை:வடக்கு மாகாண சுற்றுலா சேவை பிரிவு நடத்திய உடல்-உள ஆரோக்கியத்துக்கான பௌர்ணமி கூடல் நிகழ்வு, உள்ளூர் பிரமுகர்கள் முதல் உல்லாசப் பயணிகள் வரையில் ஏராளமானவர்களை ஈர்ப்பதாக நடைபெற்றிருந்தது.

பெப்ரவரி 23 ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் மாலை 4.30 மணிக்கு பண்ணை சுற்றுவட்ட நடைபாதை பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்வில் யோகாசன செயல்முறை விளக்கமும், சும்பா உடற்பயிற்சி விளக்கமும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மருத்துவர்களான திருநாவுக்கரசு ராகுலன், தர்சினி சிவகுமார் ஆகியோர் உடல்-உள ஆரோக்கியத்துக்கான யோகாசன செயன்முறை விளக்கத்தை தமது மாணவர்களுடன் இணைந்து வழங்கினார்கள்.

யாழ் பல்கலைக்கழக சமூகவியல்துறை இறுதியாண்டு மாணவியான பிரிய தர்ஷினி தர்மகுலசிங்கம் மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி க.பொ.த. சாதாரணதர மாணவியான தீரணா றுஷாங்கன் ஆகியோர் மருத்துவர்களுடன் இணைந்து மேடையில் ஆசனாங்களைச் செய்து காட்டினார்கள்.

தொடர்ந்து சும்பா உடற்பயிற்சி நிபுணர் செரி வாணி நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இரண்டு சிறுமிகளை இணைத்து இசையுடன் கூடிய சும்பா உடற்பயிற்சி செயல்முறை விளக்கத்தை வழங்கினார். சும்பா செயன்முறை விளக்கத்தை யாழ் கோட்டை மதில் சுவரிலிருந்து கண்ணுற்ற சுற்றுலா பயணிகள் இரசித்து, தாமும் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

யோகாசனத்துடன் இணைந்து உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த பாரம்பரிய ஆரோக்கிய உணவுகளையும் அறிமுகப்படுத்தும் இந்தத் திட்டத்தின்படி, நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு இலைக்கஞ்சி மற்றும் குரக்கன் கூழ் என்பன வழங்கப்பட்டன. அல்லை விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த கிரிசான் இவற்றைத் தயாரித்துக் கொண்டுவந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில், யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.அறிவழகன், ஐக்கிய நாடுகள் அலுவலக யாழ் உயரதிகாரி காயத்திரி, நொதேர்ண் வைத்தியசாலை உரிமையாளர் மருத்துவர் கேசவன், கொமர்ஷல் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் ஜெயபாலன், யாழ் வைத்தியசாலை வீதி கிளை முகாமையார் ராஜமனோகரன், சம்பத் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் குமணன், ஜெற்விங் உல்லாச விடுதியின் பொது முகாமையாளர் நிலந்தி மற்றும் ஆளணி முகாமையார் சுவேதிகா, யாழ் ரி.சி.ரி. பல்பொருள் வாணிப நிறுவனத்தின் பொது முகாமையாளர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட பல்துறைசார் பிரமுகர்களுடன், பொதுமக்கள், ஆர்வலர்கள், எனப் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

பௌர்ணமி தின விடுமுறைக்காக தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பல உல்லாசப் பயணிகளும் இந்த நிகழ்வை வீதியோரங்களில் இருந்தும், கோட்டை மதில் சுவரிலிருந்தும் கண்டு களித்தமை நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்திருந்தது. (05)

## பொலிஸாரால் மூவர் வவுனியாவில் கைது!

வவுனியாவில் முதியவர் ஒருவரை தாக்கி விட்டு கைத்தொலைபேசியை திருடிய சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் முதியவர் ஒருவர் வீதியால் சென்ற போது அவரைத் தாக்கி விட்டு அவரிடம் இருந்த கைத்தொலைபேசியை இருவர் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட முதியவர் வவுனியா பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த சம்பவம் தொடர்பில் 17 மற்றும் 38 வயதுடைய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த இருவரும் முதியவரிடம் இருந்து பறித்து சென்ற கைத்தொலைபேசியை வவுனியா நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் கொடுத்து விட்டு மது அருந்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த கைத்தொலைபேசியை பெற்றுக் கொண்ட மதுபானசாலை ஊழியரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட கைத்தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் குறித்த மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05-100)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் மற்றைய கட்சிகளிடம் கிடையாது

## நிமல் லன்சா தெரிவிப்பு

நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் 'புதிய கூட்டணி' முன்னோக்கிச் செல்வதாகப் புதிய கூட்டணியின் நிறுவுனரான நிமல் லன்சா தெரிவித்தார்.

கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்ற புதிய கூட்டணியின் இரண்டாவது பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நிமல் லான்சா இக்கருத்தை வெளியிட்டார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த நிமல் லான்சா -

புதிய கூட்டணியின் பலத்தைக் கட்டியெழுப்புவதற்காக இங்கு வந்துள்ள மக்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எமது வேலைத்திட்டத்திற்கு சக்தியாக இருப்பவர்களே இங்கு வந்துள்ளார்கள். இந்த புதிய கூட்டணி, வாக்குறுதிகளை அளிக்கும் ஒன்று அல்ல, இது ஒரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி செல்லும் பயணமாகும். வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்ததாலேயே 70 வருடங்களாக இந்த நாடு அழிந்தது. வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கடன் வாங்க வேண்டியிருந்தது. இல்லையெனில், பணத்தை அச்சடிக்க வேண்டியிருந்தது. வாக்குறுதிகளை நிறைவேற்ற பணமில்லை. கடன் வாங்கி பணத்தை அச்சிட்டதால் நாடு அழிந்தது.

எனவே இந்த புதிய கூட்டணியின் முக்கிய நோக்கம் மக்களுக்கு உண்மையைக் கூறுவதாகும். சத்தியத்தைப் பேசுவது, மக்களுக்கு யதாத்தத்தைப் புரிய வைப்பதாகும். அவ்வாறு அல்லாமல் பொய் கூறுவதல்ல. திருடர்கள் பிடிபட்டால் பொருளாதாரம் உயரும் என ஜே.வி.பி மேடைக்கு மேடை ஏறி கூறி வருகிறது. திருடர்களை பிடிக்க 2015 இல் எவ்.சி.ஐ.டி அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாறான ஒரு திருடனும் பிடிபடவில்லை.மீண்டும் அநுரகுமார வேலைத்திட்டம் எதனையும் முன்வைக்கமாட்டார்.

மறுபுறம், ஐ.ம.ச. தலைவர் தொடர்ச்சியாக வாக்குறுதிகளை அளித்து வருகிறார். வாக்குறுதிகளை வழங்க உங்களிடம் பணம் இருக்கிறதா? பணம் இல்லை. இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, பொருளாதார வேலைத்திட்டத்தை முன்வைப்பதைத் தவிர வேறு எந்த வழியிலும் பணம் தேட முடியாது. மரங்களிலிருந்து பணத்தைப் பறிக்க முடியாது. மந்திரத்தால் கூட பெற முடியாது. பொருளாதாரத் திட்டம் கட்டாயமாக வகுக்கப்பட வேண்டும். ஜே.வி.பி.யின் மேடைகளில் ஒரு கலைஞரை அழைத்து வந்து பாடலைப் பாட வைத்தவுடன், ஒரு நடிகையை வரவழைத்து புராணக் கதை சொல்ல வைத்தால், அது ஒரு பெரிய வேலை என்று நினைக்கிறார்கள். அண்மையில் ஒரு மேடையில், 100 பெண்கள். 200 மார்பகங்கள் என சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் இவர்கள்? அசிங்கமாக பேசுகிறார்கள். விபச்சாரத்தை சட்டப்பூர்வமாக்க வேண்டும். கொழும்பில் இருந்து காலி வரை மார்பகங்களைக் காட்டிக் கொண்டு நடக்க வேண்டும் என்கிறார்கள். இவை வேலைத்திட்டங்கள் அல்ல. நாட்டைக் கட்டியெழுப்ப வேலைத்திட்டத்தை முன்வைப்பது அவசியம்.

நாங்கள் வரும்போது கொடுப்போம் என ஐ.ம.சவினர் சொல்கிறார்கள். இருந்தால் கொடுங்கள். கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்க வேண்டும். தகுதியற்றவர்களுக்கு வழங்கிப் பயனில்லை. அதை தகுதியானவர்களுக்கு வழங்க வேண்டும். அப்படி நடந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். வீழ்ந்த குழிக்குள்ளேயே மீண்டும் நாட்டை கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது. உண்மையையும் யதார்த்தத்தையும் சொல்லி மக்களை எம் பக்கம் இழுக்க வேண்டும். அவ்வாறின்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இனிவரும் காலத்தில் நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பதே, எமது கூட்டணியின் பிரதான சவாலாகும். மார்ச் மாதத்தில், இந்த நாட்டில் மிகப்பெரிய கூட்டணி உருவாகவுள்ளது. அனைத்து இடதுசாரி மற்றும் முற்போக்கு மக்களும் இந்தக் கூட்டணியை நோக்கி ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எம்முடன் இணையவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐ.ம.ச. கட்சி ஆதரவாளர்களை எம்மைச் நோக்கி அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒரு வேலைத்திட்டம் நாட்டுக்கு முன்வைக்கவுளளோம், பொய்யான அரசியல் வாக்குறுதிகள் அல்ல.

நாம் மிகப்பெரிய கூட்டணியை உருவாக்கி மே மாதத்தில் லட்சக்கணக்கான மக்களை கொழும்புக்கு அழைத்து வருவோம். முடிந்தால் மக்களை ஒன்று திரட்டுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும், ஐ.ம.சவுக்கும் சவால் விடுக்கின்றோம். நாம் தற்போது ஆரம்பித்தது மாத்திரமே. முதலாவது ஜா-எலவில் வைத்தோம். இரண்டாவது ஹைட் பார்க்கில், மூன்றாவது அம்பாந்தோட்டையில், நான்காவது பதுளையில். ஐந்தாவது மொணராகலையில் வைக்கவுள்ளோம்.

மே மாதம் முதல் 160 தொகுதிகளிலும் மக்களை ஒன்றிணைத்து, கூட்டம் கூட்டமாக எமது கூட்டணியை நோக்கி பாரிய மக்கள் கூட்டத்தை ஒன்றிணைப்போம். பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி, பொய்யான வாக்குறுதிகளைக் கொடுப்பதால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. வருமானம் ஈட்டுவது எப்படி என்று சொல்ல வேண்டும். செலவைக் குறைக்கும் முறையைக் குறிப்பிட வேண்டும்.

மக்கள் அனைத்துப் பல்கலை மாணவர்களின் கதைகளைக் கேட்க விரும்புகிறார்கள். பல்கலை மாணவர்கள் ஆட்சியமைக்க செல்லவுமில்லை. ஆட்சியமைக்கப் போவதுமில்லை. வாய்வீச்சாளர்களும் இவர்களைப் போன்றவர்களே. குரைக்கும் நாய்களை அடக்கிய இந்தியாவுக்கு சல்யூட் அடிக்க வேண்டும். 40 ஆண்டுகளாக அரசியல் தலைவர்கள் சிறந்த முடிவுகளை எடுக்க முயன்ற போது, அதையெல்லாம் சீர்குலைத்தது யார்? மக்கள் விடுதலை முன்னணி. அந்த மக்கள் விடுதலை முன்னணி, 40 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது வந்து இந்தியா மாறிவிட்டது, நாமும் மாற வேண்டும் என்று சொல்கிறது. அன்று தலைவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ள, இவர்களுக்கு 40-50 ஆண்டுகள் சென்றுள்ளன. தற்போது எமது தலைவர்கள் சொல்வதை இவர்கள் ஏற்றுக் கொள்ள இன்னும் 50 ஆண்டுகள் செல்லும்.

அநுரகுமாரவுக்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதாக சமூக வலைத்தளங்களில் கூறப்படுகின்றது. இந்தியா சென்று 5 நாள்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அநுரகுமாரவிற்கு யெஸ், நோ என்றுதான் சொல்ல முடியும் என, ஜா எல சந்திப்பில் நான் கூறினேன். இந்தியா சென்ற பிறகு, நோ என்று கூறத் தெரியவில்லை என்று தெரிந்து கொண்டேன். இந்திய விஜயத்தின் போது அவர் எந்தவொரு உரையும் மேற்கொள்ளவில்லை. விஜயத்தின் 5 நாள்களும் புகைப்படங்கள் மட்டுமே இருந்தன. இந்தியா ரெகோர்டிங்கை நிறுத்தி வைத்துள்ளது. ஏனென்றால் பேசுவதற்கு மொழி தெரியாது. பேசியவற்றை இங்கே போட்டிருந்தால் இருக்கும் கொஞ்ச வாக்குகளும் இல்லாமல் போய் விடும். இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென் நாம் அன்றிலிருந்து கூறி வருகிறோம். இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற முடியாது என்று இவர்கள்தான் கூறினர். சம்பூரை எதிர்த்தார்கள். எட்காவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தனர். இந்தியாவில் இருந்து மக்கள் பொருள்களைக் கொண்டு வந்தால் கொலை செய்தனர். தீ வைத்தார்கள். அவ்வாறான ஒரு கடந்த காலம் ஒன்றும் உள்ளது.

இப்போது வந்து, டெண்டர் போட்டால் பரவாயில்லை என்கிறார்கள். அரைக்கு அரைவாசி கொடுத்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்திய பரவலாக்கத்தின் எதிர்ப்பு காரணமாக இறந்தவர்கள் எத்தனை பேர்? ஆனால் இப்போது 50 வருடங்கள் கழித்து 50:50 தான் சிறந்தது என்று புரிந்து கொண்டுள்ளனர். உலகின் தலைசிறந்த தொழிலதிபர்களை கொண்டு வர ஏனைய நாடுகளுடன் நாம் போட்டியிட வேண்டும் என்பதை இன்னும் 50 வருடங்களில் தான் அவர்கள் புரிந்து கொள்வார்கள். அந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு வர ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் இலங்கைக்கு வரமாட்டார்கள். அவர்கள் தெரிவு செய்ய மேலும் நாடுகள் உள்ளன. இது இவர்களுக்கு புரியாது. இவற்றைப் புரிந்து கொள்ள இவர்களுக்கு இன்னும் 50 ஆண்டுகள் செல்லும்.

ஜேவிபிக்கு வேலைத்திட்டம் கிடையாது. வாய்வீச்சாளர்களுக்கும் வேலைத்திட்டம் கிடையாது. பொய்யர்களுக்கும் திட்டம் எதுவுமில்லை. ஜோக் காரர்களுக்கு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப ஒரு வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். தவறான கூட்டங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

ஒரு திட்டத்துடனேயே இந்தக் கூட்டணி முன்னோக்கி செல்கிறது என்ற செய்தியை நாம் நாட்டுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். நாம்பொய் சொல்லவில்லை. மக்களுக்கு உண்மையைச் சொல்கின்றோம். மக்களுக்கு யதார்த்தத்தைப் புரிய வைக்கிறோம். நாம் சொல்வதைக் கேட்காமல் மக்கள் வேறு குழுவினர்களைக் கொண்டு வந்தால் மூன்று அல்லது ஆறு மாதங்கள்தான் அவர்கள் இருப்பார்கள். மக்கள் கல்லெறிந்து விரட்டியடிப்பார்கள் என்று எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு முன்னுதாரணத்தையும் நாம் கண்டுள்ளோம்.

அநுரகுமாரவால் ஆட்சிக்கு வர முடியாது. அதனாலேயே ஒரு திட்டத்தைக் கூறுகிறார் இல்லை. ஆட்சிக்கு வருவது என்றால் வேலைத்திட்டம் ஒன்றைச் சொல்வார்கள் தானே. ஆனால் அவர்கள் தினமும் போராட்டம் நடத்தவே விரும்புகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பதவியே வேண்டும். அதுதான் ஒரு திட்டத்தை சொல்கிறார்கள் இல்லை. சஜித்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டும். நாமல் ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை விரும்புகிறார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அநுரகுமார, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ச ஆகிய மூவரும் மோதிக் கொள்கின்றனர். இவர்கள் அதிகாரத்தை கைப்பற்ற விரும்பினால், ஜனாதிபதி பதவியை எடுக்க விரும்பினால், அவர்கள் வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். - என நிமல் லான்சா இங்கு மேலும் தெரிவித்தார். (05)

# அப்பம் சாப்பிட்டுக் கட்சி மாறியமை போன்ற நிகழ்வுகள் சில மாதங்களுக்குள் நடக்கும்

## முஸ்லிம் காங்கிரஸ் உதுமாலெப்பை ஆஷரூடம்

(கே எ ஹமீட்)

தேர்தல் ஒன்று இந்த வருடம் நடைபெறலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது. அது ஜனாதிபதி தேர்தலா? அல்லது பொதுத்தேர்தலா? என்பதை அரசாங்கம் இன்னும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை. இந்த நிலையில் நமது நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் முக்கியமானவர்கள் எந்த கட்சியுடன் இணைந்துள்ளனர் என்பதை நாம் இப்போது அடையாளம் காண முடியாதுள்ளது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அமைச்சர் பதவியிலும், சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் பதவில் இருந்தவரா பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று நாம் யாரும் எதிர்பாக்கவில்லை ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட வேண்டும் என்ற பிரேரனையை ஆளுங்கட்சிக்கூட்டத்தில் கொண்டு வந்த மைத்திரி பால சிறிசேன, மஹிந்த ராஜக்ஸவுடன் அமர்ந்து அப்பம் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டு நேரடியாக ரணில் விக்கிரம சிங்கவின் கூட்டத்தில் கலந்து கொண்டபின் தான் எல்லோரும் அறியக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

இதே போன்ற நிகழ்வுகள் இன்னும் சில மாதங்களில் நமது நாட்டில் நடைபெறலாம்.தேர்தல் அறிவிப்பு வரும் வரைநாம் பொறுமையாக இருந்தால் அவைகளை அறிந்து கொள்ளலாம் என சம்மாந்துறை 09ம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளை புனரமைப்பு கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறையில் நடைபெற்ற போது கலந்துகொண்டு உரையாற்றிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும்,முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

சம்மாந்துறை தொகுதியில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் கிளை,இளைஞர்கிளை,மகளிர்கிளைகள் 216 கிளைகள் புனரமைக்க வேண்டியுள்ளது.இதுவரை சம்மாந்துறை, இறக்காமம், வரிப்பத்தான்சேனை, நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் 27 கிளைகளும்,08மகளிர்கிளைகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. சம்மாந்துறை தொகுதியில் இன்னும் 181 கிளைகள் புனரமைக்கப்பட்ட வேண்டியுள்ளது.

நாம் கட்சிக்கிளைகள் புனரமைப்பு பணிகளை தேர்தல் எதுவும் இல்லாத காலத்தில் முன்னெடுத்துள்ளோம் இதனால் கிராம மட்டத்தில் நமது மக்களைச் சந்தித்து அவர்களின் மன நிலையை அறியக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.எதிர்கால கட்சி செயற்பாடுகளில் எல்லோரையும் இணைத்துக் கொள்ள வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. சம்மாந்துறையில் அமைந்துள்ள 51 கிராம சேவகர் பிரிவுகளில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகளை புனரமைக்கும் செயற்பாடுகள் நிறைவு பெற்றதும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு சம்மாந்துறைக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஊடாக பெறலாம் என்ற யதார்த்தத்தை எல்லோரிடமும் பேச்சில் ஈடுபட்டு ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர்,அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன்,அரசியல் அதி உயர் பீட உறுப்பினர் ஏ.எம்.ஏ.அஸீஸ்,முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.நளீம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)

### அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலயத்திற்கு

# பழைய மாணவர் சங்கத்தால் மடிக் கணினி அன்பளிப்பு

(கே எ ஹமீட்)

பாடசாலையின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள், இதர நடவடிக்கைகளை இணைய உலகுக்கு ஏற்றால்போல் வடிவமைப்பது இன்று சவால் நிறைந்த ஒன்றாக மாறிப்போயுள்ளது.

அந்த வகையில் அரசினர் ஆண்கள் வித்தியாலய அதிபர் மடிகணிணியின் தேவையின் அவசியம் கருதி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திடம் கோரியிருந்தார்.

குறித்த கோரிக்கையினை கருத்திற்கொண்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், அரசினர் ஆண்கள் வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளருமான வைத்தியர்ஜாப் தனது சொந்த நிதியினூடாக பெற்று பாடசாலை அதிபர் ஐ.எல்.சாஜித்திடம் வழங்கிவைத்தனர். இதன்போது சங்கத்தின் உறுப்பினரும், எம்.ஜே.எஸ். குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ.எம். ஜரீன் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் கோரிக்கைகளை செவிசாய்த்து இவ்வாறான உதவி, ஒத்தாசைகளை வழங்கும் இப் பழைய மாணவர் சங்கத்திற்கு பாடசாலை சமூகத்தினர் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# நிந்தவூர் கடற்கரை பகுதிகளில் லயன்ஸ் கழகத்தால் சிரமதானம்





(எம்.எம்.ஜெஸ்மின்)

நிந்தவூர்,சம்மாந்துறை மற்றும் கல்முனை நகர் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்திருந்த கடற்கரையோர சிரமதான நிகழ்வு நிந்தவூர் கடற்கரை பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விளையாட்டுக் கழகங்கள், பொது நலன்புரி அமைப்புகள், தன்னார்வு தொண்டர்கள் ,பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கலந்து கொண்டோருக்கு மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.(05)

# மறைக்கப்பட்ட உண்மையும்........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகள் வழங்குவதாக அறிவித்த நீண்ட தூரம் சென்று இலக்குகளை தாக்கும் தன்மைகொண்ட ஏவுகணைகள், போர் டாங்கிகளைப் பெறுவதற்காக உக்ரைன் காத்திருக்கிறது.

கிரிமியாவுக்கு நில வழித்தடத்தை விரிவுபடுத்தி, விநியோகங்களைத் தொடர ரஷ்யா முயல்கிறது. அத்துடன்

ஒரு புதிய ரஷ்ய தாக்குதல் கிழக்கு லுஹான்ஸ்க் பகுதி, டொனெட்ஸ்க் பகுதி, சபோரிஜியா பகுதி, மரியுபோல் நகரம் மற்றும் துறைமுகம் ஆகிய பகுதிகளில் ஏதாவது ஒன்றிலிருந்து வரலாம் என உக்ரைன் ஊகிக்கிறது.

**மேற்கத்திய ஊடகங்களின் ரஷ்ய விரோதப்போக்கு**

பொதுவாகவே எப்போதும் ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் பரவி அது உலகெங்கும் முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அத்துடன் கீழைத்தேச ஊடகங்களிலும் பரவியுள்ளதை காணலாம்.

அது மாத்திரமன்றி அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் மேற்கத்திய ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பரப்புரை செய்து வருவதையும் பார்க்கிறோம்.

ஏன் இந்தப் போர் என்பதும், எங்கிருந்து இவை தோன்றின என்பதும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். எந்தப் போர் என்றாலும் அது அநாகரிக காட்டுமிராண்டித்தனமானது, இன்றைய உலகம் போருக்கான உலகம் அல்ல. கொரோனா தாக்கத்தின் பின்னரான பொருளாதாரச் சீரழிவிலிருந்து மீள முடியாமல் தனிமனிதர்களும் குடும்பங்களும் ஏழை நாடுகளும் தத்தளித்து வரும் நிலையில் போர் என்பது பெரும் கொடுமை என்பதே உண்மையாகும்.

சோவியத் யூனியன் சிதைந்த பிறகு, முன்னைய ரஷ்ய அதிபர் பொறிஷ் யெல்சின் காலத்தில் மேற்கத்திய உலகம் மகிழ்ச்சியடைந்தது மாத்திரமன்றி, அமெரிக்கர்கள் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ரஷ்யாவுக்கு எதிரான செயல்களை



செய்ய முடிந்ததும் உண்மையே.

**திரிபுபடுத்தப்பட்ட மேற்குலக ஊடகங்கள்**

உலகை உலுக்கிய செப்டம்பர் 11, 2001 அன்று அமெரிக்க நிதி நிறுவனங்கள் மீதான தாக்குதலுக்குப் பிறகு, அப்போதைய அதிபர் புஷ், ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தார். ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாத ‘பேரழிவு ஆயுதங்கள்’ என்ற போலிக் காரணத்தின் கீழ் அமெரிக்கர்கள் ஈராக்கில் தலையிட்டனர். அந்த நாடுகள் கண்ட பேரழிவுகள் சொல்லில் அடங்காதவை.

ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப் போயுள்ளமையால் இப்போர் பற்றிய திரிபு படுத்தப்பட்ட செய்திகளையே உலகம் முழுவதுமாக பரப்புகின்றது.

# பசுமை இயக்கத்தின் அறிவொளி நிகழ்ச்சி

### மல்லாகத்தில் நடந்தது



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மல்லாகம் கல்லாரை கிராமத்தில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் தொடர்பான அறிவைப் புகட்டுவதன் ஊடாகச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்னும்



நிகழ்ச்சித் திட்டமொன்றை கிராமங்கள் தோறும் முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே, கல்லாரை வளர்மதி



சனசமூக நிலைய முன்றிலில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர், மிதுசன் தலைமையில் நடைபெற்ற பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

இவர்களுடன் வளர்மதி சனசமூக நிலையத்தின் உபதலைவர் ஐ. குணசீலன், ஆலோசகர் சி. நாகதீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள். கல்லாரைக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களும், பெற்றோர்களும்பங்குகொண்டிருந்தஇந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அப்பியாசக் கொப்பிகள் அவர்களின் கற்றல் தேவைகளின் பொருட்டு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# சம்மாந்துறை ஊடகவியலாளர் மையத்திற்கு புதிய நிர்வாகம்

சம்மாந்துறை நிருபர் எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்

சம்மாந்துறை ஊடகவியலாளர் மையம் ஊடக பிரிவு

சம்மாந்துறைபிரதேசத்தைமையப்படுத்தி இளம் ஊடக ஆர்வலர்கள் ஒன்றிணைந்த சம்மாந்துறை ஊடகவியலாளர் மையத்தின் நிர்வாக தெரிவு கடந்த சனிக்கிழமை சாதிரின் இல்லத்தில் நடைபெற்றது.

இம் மையமானது சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள ஊடகவியலாளர்கள்,அறிவிப்பாளர்கள் என சமூக ஊடக இளம் ஆர்வலர்கள் அங்கத்துவர்களாக கணப்படுகின்றனர்.

மேலும்முதலாவது ஆண்டிற்கான சம்மாந்துறை ஊடகவியலாளர் மையத்தின் தலைவராக ஏ.பி.எம் இம்ரான்,செயலாளராக ஏ.எம் ஹறூஸ்,உப செயலாளராக ஐ.எல்.எம் நாஸிம்,பொருளாளராக எ.ஆர்.எம்.ஜப்கறான், அமைப்பாளராக சாதிர் ஏ ஜப்பார் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி

(ஹஸ்பர் ஏ.எச் )

கடந்த மாதம் இருபதாம் திகதி திருகோணமலை வவுனியா நெடுஞ்சாலையில் குஞ்சோத்து சந்தி அருகில் அக்கரைப்பற்றிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்சென்ற போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸால் மோதி ஒருவர் மரணமானார். இவ்வழக்கின் எதிரிகளான பஸ்ஸின் சாரதிக்கும், நடத்துநருக்கும் கெப்பிட்டிகொல்லாவ நீதிவானும் , மாவட்டநீதிபதியுமான

அசு காஞ்சன தலா ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இவ்வழக்கின் எதிரிகள் கடந்த மூன்று கிழமைகளாக விளக்கமறியலில் இருந்து வந்துள்ளனர். இவர்களினது பஸ்ஸால் மோதி ஒருவர் மரணமான போதும் பஸ்ஸை நிறுத்தாமலும், பொலிஸாருக்கு தகவல் கொடுக்காமலும் தண்டனை சட்ட கோவையின் பிரிவு 298 இன் கீழும் எதிரிகளான அஜித் ரணசிங்க, சின்னதுரை அமல்ராஜ் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன் மற்றும் சதுரங்க ஆகியோர் செய்த பிணை விண்ணப்பத்தின் மீது நீதிவான் எதிரிகளை எச்சரித்து பிணையில் விடுவித்தார். (05)

# சிறைச்சாலை கண்காணிப்புகுழு உறுப்பினராக ஜீவன்ராஜ் நியமனம்

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவால் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளுக்கான மேலதிக சிறைச்சாலை கண்காணிப்புக் குழு உறுப்பினராக எஸ்.ஜீவன்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ரிஎம்விபிதலைமைஅலுவலகத்தில் அண்மையில் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபி விருத்தி ராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனும் கலந்து கொண்டார். (05)

# ஆலங்கேனி ஶ்ரீமஹா விநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழா

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஆலங்கேனி ஶ்ரீமஹா விநாயகர்ஆலய பூங்காவனத் திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இக் கோவில் திருவிழாவை ஒட்டி கிண்ணியா பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் பயிலும் மாணவரிடையே பேச்சு, கவிதை, கட்டுரை, நாடகம், நடனம் முதலிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளை வழங்கி வைத்தார். அத்தோடு மேற்படி திருவிழாவை சிறப்பான முறையில் நடத்திய சைவக் குருமாரையும்கௌரவித்தார். (05)




காலைக்கதிர் Kalaikkathir



# கண்டி கோதமி பெண்கள் கல்லூரியில் மாணவிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்லூரி மற்றும் கல்லூரி வாழ்க்கைக்குப் பின்னரான நிகழ்வுகளை மீட்டுப் பார்க்கும் உந்துதல் போன்றவற்றோடு தொடர்புடையதாக இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

மாணவிகளிடையே க.பொ.த.உயர்தரம் மற்றும் க.பொ.த.சாதாரண தரம் போன்ற பரீட்சைக்கு தயார் படுத்தும் நினைவாற்றலை வளர்ப்பது தொடர்பிபிலும் வாழ்க்கைக்கு துணை புரியும் தலைமைத்துப் பண்புகளை மேலும் வளர்க்கும் நிகழ்வாகவும் அமைந்திருந்தது.

கல்லூரி அதிபர் ரசீகா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வளவாளராக லெனின் லக்மால் பிரேமரெட்ன கலந்து கொண்டார். (05)



# வவுனியா வடக்கில் தனிநபரால் குளம் ஆக்கிரமிப்பு அதன் கீழான விவசாய நடவடிக்கை பாதிப்படைவு



வவுனியா வடக்கு, காஞ்சிரமோட்டைப் பகுதியில் உள்ள குளம் ஒன்று தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் நிலையில், அதன் கீழ் உள்ள விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளன என அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியாவடக்குபிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட மருதோடை கிராம அலுவலர் பிரிவின் ஒரு கிராமமே காஞ்சிரமோட்டை. 1977 ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னிலங்கையில் இடம்பெற்றவன்முறைசம்பவங்கள்காரணமாகஇடம் பெயர்ந்த 300 தமிழ் குடும்பங்கள் காஞ்சிரமோட்டை மற்றும் அதன் அருகில் உள்ள காட்டு பூவரசங்குளம், நாவலர் பண்ணை போன்ற கிராமங்களில் காந்தீயம் அமைப்பால் குடியேற்றப்பட்டனர்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிலர் காணாமல் போன சம்பவத்தையடுத்து, இக் கிராமங்களில் வசித்த மக்கள் அச்சம் காரணமாகக் கட்டம் கட்டமாக இடம்பெயர்ந்து, உள்நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் குடியேறியதுடன், பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து இந்தியாவுக்கும் சென்றிருந்தனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் மீளவும் பல குடும்பங்கள் குடியேறிய நிலையில் அடிப்படை வசதிகள்இன்மையாலும்,வனவளத்திணைக்களத்தின் அச்சுறுத்தலாலும் பல குடும்பங்கள் மீள இடம்பெயர தற்போது 40 வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தப் பகுதியில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதுஇருந்த பண்ணைபுளியங்குளம் என்கின்றகுளம்தனிநபர்ஒருவரால்ஆக்கிரமிக்கப்பட்டு வயல் நிலமாக மாற்றப்படுவதாக அங்கு வசிக்கும் பொது மக்களும், மருதோடை கமக்கார அமைப்பும் குற்றச் சாட்டியுள்ளனர்.

மருதோடை கமக்கார அமைப்பின் குற்றச் சாட்டையடுத்து அப் பகுதிக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயம் செய்த கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் விமலரூபன் உள்ளிட்ட அரசஅதிகாரிகள்குளத்தின் தற்போதைய நிலையை பார்வையிட்டனர். இதன்போது குளத்தின் அணைக்கட்டு அகற்றப்பட்டு அக்குளம் ஆக்கிரமிக்கப்படுகின்றன எனத் தெரிவித்த அதிகாரிகள், மக்களின் முறைப்பாட்டைக் கேட்டறிந்ததுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர்.

இதன்போது கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கருத்து தெரிவிக்கையில், குறித்த பகுதியில் தனிநபர் ஒருவர் குளத்தை ஆக்கிரமிப்பதாக அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன. இதனை அந்தத் திணைக்கள அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். குறித்த பாழடைந்த குளத்தை மீளப் புனரமைப்பதற்குத்



தேவையான நிதி இந்த வருடத்திலேயே பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், குறித்த குளத்தின் கீழான விவசாய செய்கை சுமார் 70 ஏக்கர் வரை இடம்பெறும்வகையில்செயற்படுத்தப்படவுள்ளதுடன், காணியற்ற அப் பகுதி மக்களுக்கு ஓர் ஏக்கர் வீதம் காணி வழக்குமாறும் அமைப்புக்கள் கோரியுள்ளன. இது தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். அத்துடன்குளத்தைஆக்கிரமித்துள்னளதனிநபரிடமும் அதிகாரிகள் ஊடாக ஆவணங்களை கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

(05-100)

# வவுனியா உமாமகேஸ்வரன் சமாதி அருகில் புளொட் மூத்த தலைவர் உடல் அடக்கம்



வவுனியா, கோவில்குளம், சிவன் கோவிலருகில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் நினைவு இல்லத்தில் உள்ள அவரது சமாதி அருகில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மூத்த தலைவர் ராகவனின் உடலும் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) அடக்கம் செய்யப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனியின் சிரேஸ்ட உபதலைவருமான ராகவன் அல்லதுஆர்ஆர்எனஅழைக்கப்படும் வேலாயுதம் நல்லநாதர் அண்மையில் சுகவீனம் காரணமாக மரணமடைந்திருந்தார்.

அவரது உடல் வவுனியா, கோவில்குளம், சிவன் கோவிலருகில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் சமாதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன், அஞ்சலி உரைகளையும்ஆற்றினர். அதன்பின்மறைந்த ராகவனின் உடல் கோவில்குளத்தில் உள்ள உமா மகேஸ்வரன் சமாதி அருகில் அடக்கம் செய்யப்பட்டது.







இந்நிகழ்வில், புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம்அடைக்கலநாதன், ஈபிஆர்எல்எப்அமைப்பின் தலைவர் சுரேஸ் பிறேமச் சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் வேந்தன் மற்றும் ஊடகப்பேச்சாளர் துளசி, ஈபிடிபி கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானசிவசக்தி ஆனந்தன், சிறிகாந்தா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப. கஜதீபன், செந்தில்நாதன் மயூரன் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள், புளொட் அமைப்பு உறுப்பினர்கள் எனப்பலரும்கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(05-100)



# வவுனியா புதிய பஸ் நிலையம் அருகில் நிறுத்தியிருந்த மோ.சைக்கிள் திருட்டு

வவுனியா, புதிய பஸ் நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புதிய பஸ் நிலையம் அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றை இரவுநிறுத்திவிட்டுகொழும்புபயணித்த ஒருவர் மறுநாள் பகல் வந்து பார்த்த போது அவரது மோட்டர் சைக்கிள் விட்ட இடத்தில் காணப்படவில்லை. அப் பகுதியில் தேடிய போதும் மோட்டார் சைக்கிள் கிடைக்காத நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மோட்டர் சைக்கிள்களை பொது இடங்களில், வீதியோரங்களில் நிறுத்தி விட்டு தூர பயணங்களை மேற்கொள்ளாது அதனை பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி விட்டு செல்லுமாறு வவுனியா பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

(05-100)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.02.2024இல் வெளியிடப்பெற்றது.